2013 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியைப் பொறுத்தவரையில், இன்றைக்கு அனைத்துத் தரப்பினருக்கும் ஒரு பொற்கால ஆட்சியாக சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கின்றது. உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்தக் கருத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

133—

குடமுழுக்கு

***7276—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி மந்தவெளியில் உள்ள ஸ்ரீதிரௌபதியம்மன் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி நகர், மந்தவெளியில் அமைந்துள்ள அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிருவாகம் பரம்பரை அறங்காவலரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்குக்

கடைசியாக 1988 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றது. தற்போது இந்தத் திருக்கோயிலுக்கு முன்கோபுரம் கட்டும் பணிக்காக ரூ. 9.50 இலட்சம் மதிப்பீட்டிலும், அம்பாள் சன்னதியைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பிக்கும் பணிகளுக்காக ரூ.3.20 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 12.70 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, விரைவிலே கோயிலின் திருப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. திருக்கோயிலின் திருப்பணிகள் விரைவில் செய்து முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் இத்திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.*

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த மெய்ப்பொருள் ஆகி, சிறந்ததோர் வாழ்வு தந்து, தேசத்தைக் காத்தருளும் எங்கள் குலதெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். எங்கள் கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகரத்திலுள்ள அருள்மிகு சிதம்பரேஸ்வரர் திருக்கோயிலில் அன்னதானத் திட்டமும், புதிய திருத்தேர் செய்வதற்கு அனுமதியும் வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கோடானுகோடி நன்றிகளை என் சார்பிலும், என் தொகுதி மக்கள் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கள்ளக்குறிச்சி, மந்தைவெளியில் அமைந்துள்ள ஸ்ரீ திரௌபதியம்மன் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்ய அனுமதி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மேலும், மிகவும் பழமைவாய்ந்த பிரார்த்தனைத் தலமான நல்லாத்தூர் அருள்மிகு புதுப்பட்டு மாரியம்மன் திருக்கோயில் கடந்த 30 ஆண்டுகளாக மராமத்துப் பணிகள் செய்யப்படாமல் இருக்கின்றது. இதற்காக சுமார் 11 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கு

2013 ஏப்ரல் 2]

மதிப்பீடு தயார் செய்து, ஆணையர் அவர்களுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று நிறைவேற்றித் தந்திட பணிந்து கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான், வருடத்திற்கு 1,006 கோயில்கள் வீதம் திருப்பணிகள் எல்லாம் செய்யப்பட்டு, குடமுழுக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோயிலில், விரைவாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியோடு விரைவிலே அந்தப் பணியும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

திருமதி க. அழகுவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

134—

புதிய கட்டடம்

***6964—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—